# கோவிட்-19
# காவல்துறைக்கான குழந்தைநேய வழிகாட்டுதல்கள்

தற்போது நிலவும் கோவிட்-19 சூழலில் காவல்துறை ஊரடங்கு வழிகாட்டுதல்களை அமல்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கிறது. இச்சூழலில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளை அடையாளம் கண்டு மீட்டெடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணியாகிறது. அதுமட்டுமல்லாமல் இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு பாதுகாப்பான முகாம்களை உறுதி செய்வதில் முக்கியமான பங்கைக் கொண்டுள்ளது. இந்த சூழலில்தான், குழந்தைகள், குறிப்பாக பெண்குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் கீழ்காணும் குழந்தைநேய வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 1. சாலையோரம் வாழும் குழந்தைகளின் மீட்பு மற்றும் மறுவாழ்வு

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சாலையோரம் வாழும் குழந்தைகளை அடையாளம் கண்டு மீட்டெடுத்து மறுவாழ்வு அளிப்பதில் முதலில் அவர்களோடு தொடர்புக்குள் வருவது காவல்துறையினர்தான். அப்படிப்பட்ட குழந்தைகளை காவல்துறையினர் சந்திக்கும்போது, அவர்கள் ஆதரவற்றவர்களா, பெற்றோர்களை பிரிந்திருக்கிறார்களா அல்லது உறவினர்கள் அருகாமையில் வசிக்கிறார்களா என்பது குறித்து விசாரிக்க வேண்டும்.

- சாலையோர குழந்தைகளுக்கு உறவினர்கள் இருந்து அந்த குடும்பங்களுக்கு பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் அடிப்படை வசதி இருந்தால், அவர்களை அக்குடும்பத்தோடு சேர்த்துவிட்டு தகவலை குழந்தைகள் நல குழுமத்திற்கு தெரிவிக்கவேணடும்.
- சாலையோர குழந்தைகள் ஆதரவற்றவர்கள் எனக் கண்டறியப்பட்டால், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்காக அவர்களை குழந்தைகள் நல குழுமம் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலமாக குழந்தை பராமரிப்பு இல்லத்தில் ஒப்படைக்கவேண்டும்.
- இதுபோன்ற எல்லா சூழ்நிலைகளிலும் குழந்தைகள் நல குழுமம் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு தவிர, சாலையோர குழந்தைகளுக்காக பணிபுரியும் இதர அமைப்புகளையும் தொடர்பு கொள்ளலாம். ஆகையால் காவல்துறையினர் இவற்றைப் பற்றி நன்கு அறிந்துவைத்திருக்க வேண்டும். கடுமையான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும குழந்தைகளின் வழக்குகளுக்கு சைல்டுலைன் உதவியோடு சிறார் உதவி காவல் மையத்தை (Special Juvenile Police Unit) தொடர்பு கொள்ளலாம்.

## 2. இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற வளரிளம் தொழிலாளர்களை மீட்பது மற்றும் மறுவாழ்வு செய்வது

பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து இடம்பெயர்ந்த ஏராளமானவர்களுக்கு முகாம்களில் தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்பட்டு வருகிறது. மற்றவர்கள் பிற இடங்களில் தங்கியுள்ளனர். சில குழந்தைகள் குடும்பங்களுடனும், பிறர் உறவினர்களுடனும் (பெற்றோரை பிரிந்துள்ள குழந்தைகள்) வேறுசிலர் தனியாகவும் (ஆதரவற்ற குழந்தைகள்) உள்ளனர். இவர்களின் நலனுக்காக நாம் முன்னுரிமை கொடுத்து தலையீடு செய்யவேண்டியவைகளாவன:

- ஆதரவற்ற குழந்தைகளை அடையாளம் கண்டு உடனடியாக அவர்களை சைல்டுலைன் (1098), குழந்தைகள் நல குழுமம் அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுடன் இணைக்கவேண்டும்.
- உணவு, ஊட்டச்சத்து, குடிநீர் அல்லது அடிப்படை சேவைகள் கிடைக்கவில்லையெனில், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், துறைகளை (சமூக நலம் மற்றும் சமூக பாதுகாப்புத்துறை, சுகாதாரதுறை) அணுகவும்.

## 3. தனிமைப்படுத்தப்பட்ட முகாம்களில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை காவல்துறை பின்வருமாறு உறுதிப்படுத்த முடியும்

• குழந்தைகள் பெற்றோர், உறவினர்கள் அல்லது பிற பராமரிப்பாளர்களுடன் ஒன்றாக இருப்பதை உறுதி செய்யுங்கள்.

• குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் பயன்படுத்தும் பகுதிகள் பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் மற்றும் அவர்களை தொடர்ந்து கண்காணியுங்கள்.

• முகாம்களில் உள்ள அனைத்து பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருத்தமான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

• 1098 மற்றும் பிற முக்கிய தொலைபேசி எண்கள் பற்றிய தகவல்கள் அனைவருக்கும் தெரிந்திருப்பதை உறுதிசெய்யலாம். முடிந்தால், கோவிட்-19 நெருக்கடிச் சூழலிருந்து பாதுகாப்பதற்கான விளம்பரங்கள் மற்றும் நேர்மறையான செய்திகளைக் அனைவரும் பார்க்கும்படி செய்யலாம்.

• குழந்தைகள் செல்லக்கூடிய பொதுவான பகுதிகளில் போதுமான விளக்குகள் இருப்பதை உறுதிசெய்க.

## அ. கோவிட் 19 சூழலில் பாதிக்கப்பட்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பு

• தனிமைப்படுத்தப்பட்ட அல்லது கோவிட்-19 சிகிச்சையில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக தனிமைப்படுத்தப்பட்ட அல்லது கோவிட்-19 சிகிச்சையில் உள்ள பெற்றோர்களுடைய குழந்தைகளுக்கு பின்வரும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை வடிவமைப்பது அவசியம்:

1. சுகாதார மற்றும் மருத்துவ சேவைகள்
2. ஆற்றுப்படுத்துதல் மற்றும் மனநல ஆலோசனை
3. உணவு
4. விளையாட்டு மற்றும் ஓய்வு அம்சங்கள்

• உளவியல் தேவைகளுக்காக மனநல ஆலோசகர்கள் மற்றும் சைல்டுலைனுடன் தொடர்புகொள்ள உறுதி செய்ய வேண்டும். பாதுகாப்பு தேவை இருந்தால், குழந்தைகள் நல குழுமம் அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுடன் தொடர்பு கொள்ள வேண்டும். குழந்தை நேய சேவைகள் மற்றும் உள்ளூர் மருத்துவக் குழுக்களுடன் அவர்களை ஒன்றிணைக்க வேண்டும், மேலும் குழந்தைகளைக் கையாள்வதற்கான சிறப்பு நெறிமுறைகள் முன்வைக்கப்பட வேண்டும். தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உறுதி செய்யப்பட வேண்டும். கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்ட குழந்தைகளை புண்படுத்தும் வார்த்தைகளை பயன்படுத்தாமல் மரியாதையுடன் நடத்திட வேண்டும்.

## ஆ. கூடுதல் கவனம்செலுத்தவேண்டிய தேவைகள்:

- பெண்கள், குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கு கழிவறைகள் மற்றும் குளிக்கும் பகுதிகள் போதுமான பாதுகாப்பைக் கொண்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும்
- குறைபாடுகள் உள்ளவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிசெய்யவேண்டும்.
- மாதவிடாய் மற்றும் இதர சுகாதார மேலாண்மை சேவைகளை பயன்படுத்திக்கொள்ள வளரிளம் பெண்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துங்கள்
- மாநிலங்களுக்கு இடையிலான இடம்பெயர்வு குறித்த நெறிமுறைகளை பின்பற்றுங்கள்.

## 4. கோவிட்-19 சார்ந்த வன்முறை தடுப்பு

- தனிமைப்படுத்தல் மற்றும் பிற முகாம்களில், பெண்கள் மற்றும் குழந்தைகள் வன்முறை மற்றும் பாலியல் துன்புறுத்தல் எதிர்கொண்டால் அணுகக்கூடிய ஒரு பயிற்சி பெற்ற நிபுணருடன் பாதுகாப்பான அவசர இடத்தை அவர்களுக்கு வழங்கவும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளிடமிருந்து வன்முறை மற்றும் பாலியல் துன்புறுத்தல் குறித்த அறிக்கைகளைப் பெறுவதற்கு பொறுப்பான தனிமைப்படுத்தப்பட்ட மையத்தில் ஒரு மேலாளரை நியமிக்கவும். ரகசிய மற்றும் பாதிக்கப்பட்டவர் நலன் சார்ந்த அணுகுமுறைகளைப் பயன்படுத்தி புகார்களைப் பெறுவதில் மேலாளருக்கு பயிற்சி அளிக்கப்படுவதை உறுதிசெய்க, இதில் பரிந்துரை மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் புரிந்துகொள்வது அவசியம்.
- பாலியல் சுரண்டல் அல்லது வன்முறை குறித்து புகாரளிக்கும் நபர்கள் மற்றும் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களை மேலும் தொடர் கண்காணிப்பளித்து சிறப்பு சேவை வழங்கப்படுவதை உறுதி செய்க.
- பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சிறுவர் பாலியல் சுரண்டல் (The Protection of Children from Sexual Offences (POCSO) Act) தொடர்பான வழக்குகளை உடனடியாக காவல்துறையினர் பதிவு செய்து, பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் உறுதி செய்ய வேண்டும்.
- கோவிட்-19 அபாயங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அவர்களின் பங்குடன் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் காவல்துறையும் முக்கிய பங்கு வகிக்க முடியும்.

## 5. பாதிக்கப்படக்கூடிய சூழலில் இருக்கும் குழந்தைகளுக்கு உளவியல் சேவைகள் மற்றும் சைல்டுலைன் (1098) சேவைகள் குறித்த விழிப்புணர்வு

- காவல்துறையினர் தங்களுடைய ரோந்து பணிகளின்போது குழந்தைகள் தங்கள் வீடுகளிலும் அண்டை பகுதிகளிலும் ஏதேனும் துன்புறுத்தல், வன்முறை ஏற்பட்டால் தொடர்புகொள்ளவேண்டிய 1098 தொலைபேசி எண் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.
- மனநல ஆலோசனைக்கான பரிந்துரை சேவைகளின் பட்டியலையும், தனிமைப்படுத்தப்பட்ட மையங்களின் தொடர்பு எண்களின் பட்டியலையும் காவல்துறையினர் மாவட்ட குழந்தைகள் நல அலுவலரிடம் கோரலாம்.

## 6. கோவிட்-19 சூழலில் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து 2020 ஏப்ரல் 03 தேதியிட்ட உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களை அமல்படுத்துதல்

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் இரு நீதியரசர் அமர்வு, கோவிட்-19 சூழலிருந்து மாநிலத்தின் பராமரிப்பில் உள்ள குழந்தைகளைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் குறித்து ஏப்ரல் 3, 2020 அன்று, உத்தரவு பிறப்பித்தது. அந்த தீர்ப்பை முழுமையாக பின்பற்றவும்.

- சட்டத்திற்கு முரணான குழந்தைகளுக்கு பிணை வழங்குவதில் காவல்துறைக்கு முக்கிய பங்கு உண்டு. குழந்தைகள் நல இல்லங்களில் எண்ணிக்கை அதிகரிப்பதை குறைக்க பிணைகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று உச்சநீதிமன்ற உத்தரவு தெளிவாகக் பரிந்துரைக்கிறது. குழந்தைகளின் சிறந்த நலனையும் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, காவல்துறையினரால் இளம் சிறார் நீதி குழுமத்திற்கு குழந்தைகளை கொண்டு செல்வதை குறைக்க வேண்டும்.
- குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக குழந்தைகள் நல குழுமம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் குழந்தை பராமரிப்பு இல்லம் போன்ற நிறுவனங்களுக்கு தேவைப்படும்போது உதவுவதில் காவல்துறைக்கு பங்கு உள்ளது.
- குழந்தை பராமரிப்பு இல்லங்கள் சிறப்பாக செயல்படுவதையும் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கும் காவல்துறை உறுதுணையாக இருக்கலாம்.

## 7. குழந்தைகள் சார்ந்த கூடுதல் பாதுகாப்பு தேவைகள்:

கோவிட்-19 சமூகத்தை பெரும் துன்பத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. குடும்பங்களின் பொருளாதார மன அழுத்தம் மற்றும் இடம்பெயர்வு நெருக்கடி காரணமாக குழந்தைகள் பாதிப்படைவதை தடுக்க காவல்துறையினர் அறிந்திருக்க வேண்டியவை:

- குழந்தைத் தொழிலாளர் மற்றும் பாலியல் சுரண்டலுக்கான கடத்தல் சம்பவங்கள் அதிகரிக்கும் சூழலில் இவற்றைக் கண்காணித்து விழிப்புடன் இருக்க வேண்டும்
- காணாமல்போன குழந்தைகள் மற்றும் காணாமல்போன குழந்தைகளைப் பற்றிய புகாரளிப்பதில் அதிகரிப்பு இருக்கிறதா என்பதைக் கண்காணித்து முதல் தகவல் அறிக்கைகளை உடனடியாக பதிவு செய்து விசாரணையின் மூலம் இவ்வழக்குகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்.
- குழந்தை திருமணங்கள் மறைமுகமாக நடக்க வாய்ப்புள்ளதால், ஊர்காவல்படை மூலம் விழிப்புடன் இருந்து உடனடியாக தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- இது சார்ந்த விழிப்புணர்வு செய்திகளை காவல்துறையினர் தங்கள் சமூக தொடர்புகளிலும் பரப்புரை செய்யலாம்.
- இந்த பிரச்சினைகள் ஏதேனும் காணப்பட்டால், ரோந்து செல்லும் பகுதிகளில் தேவையான மாவட்ட அதிகாரிகளோடு சேர்ந்து குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.